அலகு 03


A/L 2021


க.பொ.த. உயர் தரம்

(புதிய பாடத்திட்டம்)

23 அரசியல் விஞ்ஞானம்

அரசு





MS. IJAS AHAMED

Prepared by
MS. Ijas Ahamed
BA (Hons) Sp in Pol Sci
University of Peradeniya

MEGA Akkaraipattu Haani Tutorial College - Addalaichenai

Rainbow College Akkaraipattu

அரசு

- அரசு என்பது உலகெங்கிலும் காணப்படுவதாகும். சமுக நிறுவனங்களிலேயே அதிக வலிமை மிக்க அமைப்பு அரசே ஆகும். அரசு இயற்கையாக தோன்றிய ஒன்றாகும். ஆங்கிலத்தில் state எனப்படும் சொல் status எனப்படும் சொல்லிருந்து பெறப்பட்டதாகும்.
- மக்கியவல்லி (1469-1527) தனது ''இளவரசன்'' எனும் நூலில் முதன் முறையாக அரசு என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்.
- அரசு என்பது மனித சங்கத்தின் உயர் மிகு வடிவமாகும். அரசு அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவானதாகும். எனவே அரசு அவசியமான ஒன்றாகும். அடிப்படைத்தேவைகள் நிறைவடைந்த பின்னரும் மனிதனுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்து வரவே அரசு தொடரந்து இருந்து வருகின்றது.
- அரசியல் விஞ்ஞானமானது தான் ஆய்வு செய்யும் எந்தக் கருப்பொருளாக இருந்தாலும் அது **அரசு** என்பதனை மையமாகக் கொண்டே இடம் பெறும் இதனால் அரசு என்பது அரசறிவியலின் முக்கியமான கருத்தியலாகும். பொதுவாக மனிதர்களுக்கு அரசின் செல்வாக்குட்படாமல் வாழ்வது கடினமானதாகும்
- மனிதன் முதன் முதலில் அரசொன்றுடன் தொடர்பு படும் சந்தர்ப்பம் பிறப்பொன்றை பதிவு செய்தலாகும். இது அவனது மரணம் வரை காணப்படும் தொடர்பாகும். அரசின் அங்கத்துவத்தைப் பெற்ற பின்னர். அது பிரஜை என்ற அந்தஸ்தாக மாறுகின்றது. அதன் பின்னர் அரசொன்றின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவனாகின்றான்.
- சமுக தாபனங்களுள் அத்தியவசியமானதும் முக்கியமானதுமான அரசு தொடர்பில் காணப்படும் விசேடமான விடயம் **அது கண்ணுக்குப் புலப்படாத கைகளினால் தீண்ட முடியாத ஆனால் எல்லா இடங்களிலும் வியாபித்து காணப்படும் தோற்றப்பாடாகும்.**
- பிரஜைகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதும் ஒற்றுமையானதும் பலமானதுமான வாழ்க்கையினை வாழ்வதற்கு தேவையான சட்டம் மற்றும் ஒழுங்கினை பேணுவதும், பொருளாதார சுதந்திரம் மற்றும் சமுக நலன்புரிகளை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாகும். என பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
- அரசை விளங்கிக் கொள்வதற்கான பிரதான மூலக் கொள்கையாக அமைவது அரசு என்பது வரலாற்று மற்றும் சமூகதோற்றப்பாடு என்பதாகும். அதன் மூலம் கருதப்படுவது ''அரசு நிச்சயிக்கபட்ட வரலாற்று நிலைகளில் வளர்ச்சியடைந்து பல்வேறு அரசியல் தளங்களில் பரவலடைந்து பல்வேறு இயல்புகளை பெற்ற சமுக நிறுவனம் என்பதாகும்.
- சுருக்கமாக குறிப்பிடுவதாயின் அரசு என்பது வரலாற்று ரீதியாக விசேடத்துவ படைப்பாகும். அது சமுகத்தின் படைப்பொன்றாகும். அதன் பொருள் அரசின் இயல்பு சமுக வரலாற்று வளர்ச்சிக்கு இணையாக மாற்றமடைந்துள்ள்து. என்பதாகும். கோத்திர அரசு முதல் நவீன ஜனநாயக அரசுகள் வரை அரசிலேற்பட்ட வரலாற்று அபிவிருத்தி இதனையே காட்டுகின்றது.

''அரசில் ஒருவன் வாழ்வதன் மூலமே நல்லவனாகின்றான் நல்ல மனிதன் ஒரு நல்ல அரசில் அன்றி வேறு எங்கும் வாழமுடியாது. அரசு தரும் சமூக வாழ்க்கையில் ஒர் மனிதன் பங்கு கொள்ளாத வரை அவன் பூரணத்துவம் அடைய முடியாது.'' ***(மீளைட்டோ)***

''அரசு மனிதனின் இயற்கையான சேரிடமாகும். ஏனெனில்,அவன் ஒரு அரசியல் பிராணியாக இருப்பதனாலாகும்.அரசுக்கு வெளியே ஒருவன் வாழ்வானாயின் ஒன்றில் அவன் மிருகமாகவோ,கடவுளாகவோ இருக்கவேண்டும்'' ***(அரிஸ்டோட்டில்)***

MS. IJAS AHAMED

அரசு மற்றும் அதன் வகிபாகம்

சமுகத்தை நிருவகிக்க உருவாக்கப்பட்ட அதிகாரக் கட்டமைப்பினையும் நிறுவனங்களையும் கொண்ட கூட்டாகவே அரசினை அடையாளப்படுத்தலாம். அரசினதும் அதன் கருவியான அரசாங்கத்தினதும் பணிகளாக சம்பிரதாயபூர்வமாக விளங்கிக் கொள்ளப்படுவது அதன் பிரதானமான மூன்று துறைகளினது செயற்பாடுகளாகும்.

01. **சம்பிரதாயபூர்வமான பணிகள்**

I. சட்டத்துறை – சட்டங்களை உருவாக்கல்
II. நிருவாகத்துறை – சட்டங்களை நடைமுறைப்படுத்தல்
III. நீதித்துறை – நீதியை நிருவகித்தல்

இந்த வகைப்படுத்தல் அரசு என்பதை விளங்கிக்கொள்ள எமக்கு பயன்பட்டாலும் அதன் பணி இவற்றைக் காட்டிலும் பரந்ததும் ஆழமானதுமாகும். இதனை விட மேலும் பல பணிகளையும் அரசு ஆற்றுகின்றது.

02.**சட்டம் மற்றும் சொத்துக்களின் பாதுகாவலன்.**

- கண்காணிப்பு மூலம் சமூக அமைதியைக் கொண்டு நடாத்துதல். (தேவையாயின் முப்படைகளையும் பயன்படுத்தலாம்.)
- நீதியை நிலைநாட்டுதல், நீதிமன்ற நிருவாகம் மற்றும் தண்டனை வழங்கல்
- சட்ட உருவாக்கம் மற்றும் சட்டங்களை வரையறுத்தல்.
- கொள்கை உருவாக்கம்.

03.பொருளாதார நிருவாகம் மற்றும் வழி நடாத்தல்.

- வரிகளை வசூலித்தல்.
- நாட்டின் பொருளாதார பாதையினை நிர்ணயித்தல் மற்றும் பொருளாதார கொள்கைகளை வகுத்தல்.

04.சமுக நிருவாகம் வழி நடத்தல் மற்றும் சமுக கண்காணிப்பு

- வருமானம் பகிர்ந்தளிக்கப்படும் முறைமைகளைத் தீர்மானித்தல்.
- பொருளாதார வணிகத்துறைகளின் தரங்களை தீர்மானித்தல்
- சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி செயற்பாடுகள்
- வறுமை ஒழிப்புத் திட்டங்கள்
- வீடு சுகாதாரம், கல்வி போக்குவரத்துத் துறைகளின் கொள்கைகளை தீர்மானித்தல். என்பவற்றை அரசு மேற்கொள்ளும்.

05 சமுகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணல்.

- அரசின் ஆள்புல எல்லைக்குள் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பாதுகாத்தல்.
- பிரஜைகள் அரசின் இறைமை அதிகாரத்திற்கு அடிபணிவதை உறுதிப்படுத்தல். அதற்காக பொலிஸ், நீதிமன்றம், மனித பலம் என்பவற்றைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தல் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களைப் பயன்படுத்தல்.

06 யுத்தப்பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்.

சமூக கட்டுமானங்களில் பொதுவாக ஏனைய எவருக்கும் இல்லாத பொதுப்பணியாக இது கருதப்படுகின்றது. அரசொன்று அரசுக்குள்ளேயும் வெளியேயும் யுத்தத்திலீடுபடுகின்றது. உள்ளக மோதலானது அரசின் பாதுகாப்பிற்கு அரசின் எல்லையில் ஏற்படும் அச்சுறுத்தலை தடுத்துக் கொள்வதற்காக அவசியமாகின்றது. அரசு வெளியக மோதல்களில் ஈடுபடுவது அரச பாதுகாப்பிற்கு வேறு அரசுகளினால் கொடுக்கப்படும் யுத்த அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் போதேயாகும்.

MS. IJAS AHAMED

07 சர்வதேச உறவுகள்:
அயல் நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுடன் போரைத் தடுக்கும் வகையில் நட்புடன் கூடிய நல்லுறவை வளர்க்க வேண்டும்.

சமுகத்தில் காணப்படும் அரசியலதிகாரத்தின் மையமாக அரசு

- அரசு என்பது மானிட சமூகத்தில் காணப்படும் மிகப்பழமையான நிறுவனமாகும். அது அரசியல் கோட்பாடு மற்றும் தத்துவங்களில் பிரதான பேசு பொருளாக காணப்படுகின்றது. ஆயினும் அது ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது அரசு விசேட தன்மை கொண்ட நிறுவனமாகும்.
- அது அரசியல் **அதிகாரத்துடன் மிக நெருக்கமாக தொடர்பு கொண்ட நிறுவனமாகும்**.எந்த ஒரு நவீன சமூகமும் அரசு ஒன்று இல்லாமல் காணப்படமுடியாது. அது அரசியல் அதிகாரத்தின் முக்கிய சின்னமாகவும் அதனை பிரயோகிக்கின்ற முக்கிய சமூக நிறுவனமாகவும் காணப்படுகின்றது.
- மனிதர்கள் ஒன்றாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஒரு ஊடகமாக அரசியல் ரீதியில் ஏற்படும் ஒற்றுமையைக் குறிப்பிடலாம். அந்த அரசியல் ஒன்றிணைவின் பிரதான வெளிப்பாடே அரசாகும்.
- மனிதர்கள் ஒன்றாக இணையும் வேறு அமைப்புக்களாக சுயாதீன ஆணைக்குழுக்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமுக இயக்கங்கள் மத நிறுவனங்கள் போன்றன செயற்படுகின்றன.
- எனினும் அரசு இவை எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரமுடைய மற்றும் உயர் சமுக நிறுவனமாகும். "அரசு மனிதக் கூட்டமைப்பாகும்" எனினும் இது மனித நிறுவனங்களின் உயர்வான நிறுவனமாகும்.

→ **அரசு மனித அமைப்பு நிறுவனங்களில் மேலான ஒழுங்கமைப்பு என்பதை பின்வரும் வாதங்களில் முன்வைக்கப்படுகின்றன.**

அரிஸ்டோட்டிலின் வாதம்

"அரசறிவியலின் தந்தையும் கிரேக்க அரசியல் தத்துவவியலாளருமான அரிஸ்டோட்டில் அரசு சமுக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமுக நிறுவனங்களை விட உயர்வானதாகும்". என்கின்றார்

ஏனைய சமுக நிறுவனங்கள் தமது அங்கத்தவர்களின் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே உழைக்கின்றன. எனினும் அரசு சமுகத்தின் அனைவரினதும் பொது மற்றும் உயர்வான வாழ்க்கையை அடைந்து கொள்வதனை தமது நோக்கமாக கொண்டிருப்பதனால் இது உயர் சமுக நிறுவனமாகும்.

கௌடில்யரின் வாதம்:

சட்டத்தினை மீறுவோருக்கு மற்றும் குற்றம் புரிவோருக்கு தண்டனை வழங்குவதற்கு ஆட்சியாளருக்கு உள்ள அல்லது அரசுக்குள்ள அதிகாரமே என அவரின் புகழ் பெற்ற நூலான **அர்த்தசாஸ்திரத்தில்** குறிப்பிட்டுள்ளதுடன் அரசுக்குள்ள மிகச்சிறப்பான அதிகாரத்தை, தண்டனை என விபரிக்கின்றார்.

ஹொப்ஸின் வாதம்

மனிதர்கள் அரசினை உருவாக்கியதும், அரச அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதும், அதற்கு அடிபணிந்ததும் தமக்கு தேவையான பாதுகாப்பினையும் அரவணைப்பையும் அரசின் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதனாலாகும்.

MS. IJAS AHAMED

லொக்கின் வாதம்

அரசு மக்களின் இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றது. அது ஒரு உடன்படிக்கையின் ஊடாக மக்களின் பிரதிநிதியாக காணப்படுகின்றது. அந்த வகையில் அரசு மக்களின் சம்மதத்தினைக் கொண்டு செயற்படுகின்றது. காரணம் அரசு பிரஜைகளின் உயிர் மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

கார்ல்மாக்ஸின் வாதம்

அரசின் விசித்திரமான பண்பு யாதெனில் அது சமூகத்தில் காணப்படும் பொருளாதார பலத்தைக் கொண்ட ஆளும் வர்க்கத்தின் கருவியாகும். அது சமூகத்தில் தாழ்ந்த நிலையில் காணப்படும் உறுப்பினரை தனது அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள செய்ய நிர்ப்பந்த அதிகாரத்தை பிரயோகிக்கும்

மெக்ஸ்வெபரின் வாதம்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனியில் வாழ்ந்த சமூகவியலாளரான மெக்ஸ்வெபர் "**தொழிலாக அரசியல்**" 1919 (politics as a vocation) என்ற கட்டுரையில் அரசு என்பது **வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக்கூறும் மனிதக் குழுவாகும்** என்றார்.

அரசு என்பதன் மூலம் கருதப்படுவது வன்முறையைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற்ற ஒரே மூலாதாரம் அரசு. அரசு தனது எல்லைக்குள்ளிருக்கும் மனிதர்களை சமூக குழுக்களை வழி நடத்தும் நிருவகிக்கும், எச்சரிக்கும், தண்டனை வழங்குவதற்கான இறுதி நிறுவனமாக அரசு காணப்படுகின்றது. இதற்கான அதிகாரம் சட்டதிட்டங்கள் நிறுவனங்கள் நபர்கள் என்பன அரசுக்குண்டு.

பாராளுமன்றம்,சட்டதிட்டங்கள்,நீதிமன்றங்கள், பணியகவமைப்பு, பொலிஸ்படை, ஆயுதப்படை, சிறைச்சாலை போன்றன அரசிடமே காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இவ்வாறான அதிகாரத்தைப் பெற்றிருப்பதே அரசின் இறைமை அதிகாரம் என்பதாகும். அதன் அதிகாரம் காணப்படும் ஆள்புல பிரதேசத்தில் உள்ள சமுகத்தை வழிநடத்தவதற்கு தேவையான சட்ட உருவாக்கம்,நடைமுறைப்படுத்தல், நீதியை நிருவகித்தல், சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றை பேணிக்கொள்வதற்காக அரசுக்கு மட்டுமே உரித்தான அதிகாரமாகும். ஏனைய சமூக நிறுவனங்களுக்கு இவ்வதிகாரமானது சிறிதளவில் கிடைப்பது அரசுக்குட்பட்ட வகையிலேயாகும்.

நவீன ஆள்புல பௌதீக அரசு

நவீன ஆள்புல பௌதீக அரசு பிரதான அங்கங்கள் நான்கின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- ⊖ வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசம்
- ⊖ சனத்தொகை
- ⊖ அரசாங்கம்
- ⊖ இறைமை

இவற்றுள் முதல் இரு அம்சங்களும் அரசு ஒன்றின் பௌதீக அம்சங்களாகவும் மற்றயவை அக அம்சங்களாகவும் காணப்படுகின்றது. எனினும் அகவம்சங்கள் அளவிலும் பண்பிலும் தன்மையிலும் வேறுபட்டுக் காணப்பட்டாலும் ஒரு அரசின் செயற்பாட்டிற்கு அடிப்படையானதாகும்.

வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசம்

- ⊕ ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி இல்லாமல் அரசு இருக்காது.மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது.

MS. IJAS AHAMED

- நவீன தேசிய அரசுகள் அதன் அதிகார பலத்தினை பயன்படுத்தும் வரையறுக்கப்பட்ட ஆள்புலம் ஒன்றில் காணப்படுகின்றது. இது தெளிவான ஆள்புல எல்லைகளை உள்ளடக்கியதாக ஒழுங்கமைக்கப்படடிருக்கும்.
- சர்வதேச சட்டமும் ஒரு அரசை அங்கீகரிப்பதற்கு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு அவசியம் எனக்கூறுகின்றது. அதேவேளை சர்வதேச அரங்கில் ஒரு அரசு தன்னை நிலைநிறுத்துவதற்கும் இந்த நிலப்பரப்பு அவசியமாகின்றது. இங்கு நிலப்பரப்பு என்பது நிலம்,நீர்,ஆகாயம்,கடல்,மலைகள்,கனியவளங்கள் உள்ளிட்ட சகலதையும் குறிப்பிடுகின்றது.
- நாடு தொடர்பான உணர்வு அல்லது தேசாபிமானம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் சாதனங்களில் பிரதான ஒன்றாகவும் ஆள்புலம் முக்கியத்துவம் பெறுகின்றது.
- நிலப்பரப்பு சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம்
- பெரிய நிலப்பரப்பு நாடுகள்: ரஷ்யா,கனடா,சீனா,அவுஸ்ரேலியா
- சிறிய நிலப்பரப்பு நாடுகள்: வத்திகான்,மோல்டா

தேசிய அடிப்படை/ மக்கள் தொகை

- அரசின் அடிப்படை இயல்புகளில் நிலப்பரப்பைப் போல மக்கள் தொகை என்பதும் மிகவும் முக்கியமானதாகும். மக்கள் இல்லாத நிலப்பகுதிகளை அரசு என்று கூறமுடியாது.
- வரையறுக்கப்பட்ட பிரதேசம் மட்டும் அரசாகிவிட முடியாது. அப்பிரதேசத்தில் நிலைத்து வாழ்கின்ற மக்கள் அவசியமானதாகும்
- சனத்தொகை எண்ணிக்கை வரையறை தேவையில்லை உதாரணமாக
- சீனா,இந்தியா கூடிய சனத்தொகை
- ஷன்மறியோ மறாக்கா குறைந்த சனத்தொகை
- நவீன அரசு தோற்றம் பெறுவதில் கற்புல சாதனமாக அமைந்தது ‘‘தேசியவாதமாகும்.’’ தேசிய வாதம் என்பது ‘‘அரசின் ஆள்புலத்தில் வாழும் அனைத்து மக்களும் ஓரே அடையாளம் கொண்ட ஒரு இனமாக கருதும் அரசறிவியல் முன்வைக்கும் ஒரு கருத்தியலாகும்.
- இதன் மூலம் தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய புரிந்துணர்வு என்பன ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனாலேயே நவீன அரசுகள் தேசிய அரசுகள் என அழைக்கப்படுகின்றன.

அரசாங்கம்.

- அரசாங்கம் என்பது குறிக்கப்பட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் நலன்களைப் பேணவும் பாதுகாக்கவும் அரசின் பெயரால் தொழிற்படும் ஒரு முகவராகும். அரசின் செயற்பாட்டை அரசாங்கம் வாயிலாகவே காணலாம். ஓர் அரசின் நிலைபேற்றிற்கு அரசாங்கம் அவசியமானதாகும் அரசு நிலையானது. அரசாங்கம் மாறக்கூடியது தெளிவில்லாமல் இருக்கின்ற ஓர் அரசுக்கு உருவம் கொடுப்பதாக அரசாங்கம் அமைகின்றது.
- ஒவ்வாரு அரசாங்கமும் மூன்று விதமான பணிகளை மேற்கொள்கின்றன. சட்டமியற்றுதல்,நிருவகித்தல், நீதிபரிபாலனம் செய்தல் என்பனவே அம் மூன்று பணிகளுமாகும். சட்டத்துறை,நிருவாகத்துறை, நீதித்துறை ஆகிய பிரிவுகளே இப்பணிகளை மேற்கொள்கின்றன.
- அரசாங்க வகைப்படுத்தல் பல்வேறாக காணப்படுவதோடு ஜனநாயக அரசாங்கம் எதேச்சதிகார அரசாங்கம், அதிகார வாத அரசாங்கம்,சமவுடமைவாத அரசாங்கம் போன்ற பல்வேறு அரசாங்க மாதிரிகளை கண்டு கொள்ளமுடியும்.அத்தோடு பாராளுமன்ற அரசாங்க முறை,ஜனாதிபதி அரசாங்க முறை,கலப்பு அரசாங்க முறை போன்ற வகையில் பல அரசாங்கங்கள் காணப்படுகின்றன.

MS. IJAS AHAMED

இறைமை

- ⊕ அரசு பெற்றிருக்கும் அதிகார பலத்தையே இது குறிக்கின்றது. அரசுக்கு உரித்தான இறைமை, சமூகத்தில் வேறு எந்த நிறுவனத்திற்கும் இல்லாத உயர் அதிகாரமாகும்.
- ⊕ சட்டங்களை உருவாக்கவும் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் சட்டங்களை மீறுவோரை தண்டிக்கவும் அரசுக்கு இருக்கின்ற ஏனைய நிறுவனங்களுக்கு இல்லாத அதிகாரம் என்பது இதன் கருத்தாகும்.
- ⊕ இந்த அதிகாரமானது ஏனையவர்களுக்கு கட்டளைகளை பிறப்பிப்பதற்கும் ஏனையவர்களின் கட்டளைகளுக்கு அடிபணியாததுமான அதிகாரமாகும்.
- ⊕ ஆள்புல எல்லைக்குள்ளும் அதற்கு அப்பாலும் அரசு உயர்வான நிலையினை பெற்றிருக்கவும் அரசின் ஆள்புலத்தின் அனைத்து நபர்களும் அனைத்து நிறுவனங்களும் அரசுக்கு தமது அடிபணிவை காட்டுவதற்கும் அது கொண்டிருக்கும் இறைமை அதிகாரமே அடிப்டையாக அமைகின்றது.
- ⊕ இறைமை பிரதானமாக உள்,வெளி என இரண்டு வகைப்படும்.

நவீன தேசிய அரசு

- ⊕ தேசிய அரசு என்பது (Nation State) நவீன அரசுகளை அடையாளப்படுத்த சமூகவியலில் பயன்படுத்தப்படும் ஒரு எண்ணக்கருவாகும். "தேசிய அரசு" என்ற கருத்து 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்தது.
- ⊕ 1789 பிரான்சிய புரட்சியின் பின்னர் தோற்றம் பெற்ற பிரான்சிய அரசு ஐரோப்பாவில் முதலாவது தேசிய அரசாகக் கருதப்படுகின்றது. இதன் அடிப்படை உள்ளடக்கம் "ஓர் இனத்திற்கு ஓர் அரசு ஓர் அரசிற்கு ஓர் இனமே உள்ளது" என்பதாகும்.
- ⊕ ஆரம்ப கால நவீன் அரசுகளுக்கு தேசிய அரசுத் தன்மை இருக்கவில்லை ஆள்புல எல்லை மற்றும் அரச அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நவீன அரசு ஒரு இனத்திற்கு ஒரே தேசியம் மற்றும் கலாசார அடையாளங்களே இருக்கவேண்டும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டது. இதனால் கலாசார,மொழி மற்றும் மதரீதியான பல்வகைமை காணப்படும் சமூகத்தில் நவீன தேசிய அரசுகள் பலவும் அரசு மற்றும் தேசத்தினை கட்டியெழுப்புவதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தன.
- ⊕ இப்பிரச்சினையை தற்காலத்தில் தேசிய அரசுகள் பன்மைவாதம் என்ற எண்ணக்கருவினால் தீர்க்க முற்பட்டது. இதனால் பன்மைவாதிகளின் அரசு பற்றிய கருத்து முதன்மைப்படுத்தப்பட்டது.

உலகமயமாதலும் அரசும்

உலகமயமாதல் என்பது தற்காலத்தில் சமூக பொருளாதார அரசியல் தளங்களில் பிரபல்யமானதொரு சொல்லாடலாக அமைந்துள்ளது. உலக மயமாதல் என்ற பதம் முதன் முதலில் **Harvard Business Review என்ற சஞ்சிகையில் "தியோடா லெவிற்' என்பவரே** பயன்படுத்தியிருந்தார். எனினும் இதற்கு சரியான பொதுவானதொரு வரைவிலக்கனம் அமைப்பது சிரமமானதாகும்.

உலகமயமாதலானது

- ❖ சூழலியலில் உலகமயமாக்கம்
- ❖ அரசியல் உலகமயமாக்கல்
- ❖ பொருளாதார உலகமயமாக்கம்
- ❖ சமூக கலாசார உலகமயமாக்கம்

என நான்கு வகைப்படுத்தலாம்

MS. IJAS AHAMED

- Θ அது பொருளாதாரம், வெளிநாட்டு வர்த்தகம், உறவுகள்,தேசிய பாதுகாப்பு ஆகிய நான்கு துறைகளில் உலகலாவியரீதியான ஒத்துழைப்பை பெறுவதாகும். ஆதற்கு பல்தேசிய கம்பனிகள் தமது ஆதிக்கத்தினை அரசுகள் மீத பிரயோகிக்கின்றன.
- Θ நவீன லிபரல்வாத பொருளாதார அரசியல் மறுசீரமைப்புக்களின் ஒரு சர்வதேசரீதியான வெளிப்பாடே உலகமயமாதலாகும். மூலதனம்,விஞ்ஞான தொழினுட்பம், தகவல் தொடர்பாடல் புரட்சி கலாசாரமயமாக்கல் தொழிலாளர்களின் சர்வதேச இடப்பெயர்வு போன்றன அரசின் தேசிய எல்லைகளை கருத்தில் கொள்ளாது இந்த எல்லைகளை தகர்த்துக் கொண்டு பரவலடைந்தது.
- Θ இவை தேசிய அரசுகளுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன? என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னிலையடைந்ததோடு இது தொடர்பான இரு கோட்பாட்டு அணுகு முறைகள் முன்வைக்கப்பட்டன.

A. உலகமயமாக்கத்தினுள் தேசிய அரசுகள் இறுதியை அடையும் என்பதும்
B. தேசிய அரசுகள் நிறைவடையாமல் அது மீளகட்டமைக்கப்படுதலுக்கு உட்படுதலும் என்பதுமாகும்.

- Θ ஜீன் மேரி கேஹேன்னோ (JEAN MARIE GEHENNO) என்பவர் 1995ல் வெளியிட்ட "தேசிய அரசுகளின் முடிவு" (The End of the Nation State) என்ற கட்டுரையில்
- Θ "உலகமயமாக்கலினால் உருவாக்கப்பட்டுள்ள நிலைமையினால் விசேடமாக உலகமயமாக்கம் சமூகம் தொர்பிலான பின்புலத்தினுள் அமைந்த தேசிய அரசுகளுக்கு தற்போது இருப்பு இல்லை தேச எல்லைகளில் தற்போது அர்த்தமில்லை
- Θ மேலும் மூலதனத்திற்கு தகவல்களுக்கு தொழினுட்பம் மற்றும் மனிதர்களின் நிறுவனங்களின் வலையமைப்புகளுக்கு தேசிய அரச எல்லைகள் தொடர்நதும் அவசியப்படாததோடு அவை தேசிய அரசுகளின் எல்லைகளை கருத்தில் கொள்ளாமல் செயற்படுகின்றன.
- Θ இன்று தேச எல்லை என்பது எவ்வித அர்த்தமும் இல்லாத ஒன்றாகும். உலக தகவல் சமூகத்தில் ஆள்புலம் என்பது தொடர்ந்து முக்கியத்துவமற்றதாகும்" எனக்கூறியமை உலகமயமாக்கத்தின் ஆரம்பத்தையும் வளரச்சியையும் எடுத்துக்காட்டியது,
- Θ சமகாலத்தில் "இனம்" என்பதற்கான முக்கியத்துவம் பலவீனப்பட்டுள்ளது. மனிதர்களை ஒன்றாகப் பிணைத்து வைத்திருப்பது சாத்தியமற்றது இதனால் தேசிய அரசு என்ற வாதம் வலுவிழந்துவிட்டது. **தேசிய அரசுகள் பலவீனமடைந்தமை உலகமயமாக்கலின் விளைவாகும்.**
- Θ தேசிய அரசுகள் பலவீனமடைதல் என்பது உலக மூலதனம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து அதன் நிர்வாகத்திலிருந்து சுயாதீனமடைந்துள்ளன.
- Θ டேவிட் ஹெல்ட் 1991 ஆம் ஆண்டு "ஜனநாயகம்,தேசிய அரசு மற்றும் உலகமயமாக்கம்" என்ற கட்டுரையில்
- Θ "உலகமயமாக்கலினால் ஒரு தனி அரசின் தலைவர் அரசிலும் நிருவாகத்திலும் உட்படாத புதிய உலகப்பொருளாதார முறைமை கட்டியெழுப்ப பட்டுள்ளது. இதுவே தற்கால சர்வதேச அரசியல் தளம் எனவும் குறிப்பிட்டார்.
- Θ அதாவது பல்தேசிய கம்பனிகளின் தொர்பு, வலையமைப்பு தோற்றம் பெற்றமையும் அவற்றினை அரசினால் நிருவகிக் முடியாதுள்ளமையும் அரசுக்கு வெளியிலுள்ள சர்வதேச அமைப்புகளுக்கு மிகவும் பலம்வாய்ந்த அரசுகளின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான திறன்கள் கிடைத்துள்ளன். இது உலகமயமாக்கதின் ஒரு வெளிப்பாடாகும்.

உலகமயமாக்கத்தினால் ஏற்படும் பிரச்சினைகள்

- **கலாசார பாதிப்பு**

- **சூழல் பாதிப்பு**

MS.IJAS AHAMED

- **நுகர்வுக்கலாசாரம்**

- **குற்றச்செயல்களின் அதிகரிப்பு**

- **அறிவுசார் சொத்துரிமை அபகரிப்பு**

1.அரசின் அடிப்படைக் கூறுகள் இரண்டு தருக?

2.உலகமயமாதல் என்ற பதம் முதன் முதலில் பயன்படுத்தபட்ட பத்திரிகையையும் அறிஞரையும் குறிப்பிடுக?

அரச மாதிரிகளும் வகைப்படுத்தல்களும்.

கோத்திர அரசு முறைமை (The Tribal State System)

ஆரம்ப கால அரசியல் நிறுவனங்களான "கோத்திர அரசு" முறைமையில் தற்போதைய சிக்கல்மிக்க சமுகங்களைப் போல அரசியலில் நிறுவனக் கட்டமைப்பு அல்லது நிறுவனங்களை காணமுடிவதில்லை. அரசியல் என்ற ஆட்சி அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப்பட்டது. இதில் பலமிக்க நபர்களினால் ஆட்சித்தீர்மானங்கள் எடுக்கும் குழு தோற்றம் பெறுவதோடு பெரும்பாலும் குலமானது ஒரு குடும்பத்தில் ஒருவர் என்ற வகையில் அதன் உறுப்புரிமையினைப் பெற்றனர்.

- இந்தக் குழு குலத்தின் ஒற்றுமையினைப் பேணிக்கொண்டது.
- குலத்தின் ஆட்சியில் தலைமைத்துவப் பங்கினை மேற்கொள்ளும் தலைவர் ஒருவர் இருப்பதோடு அவருக்கு வரையறுக்கபட்ட அதிகாரம் கிடைத்தது.
- அவரின் அரசியலதிகாரம் உற்பத்தியாவது அவருக்கிருக்கும் சிரேஸ்டத் தன்மையினாலேயே அமைகின்றது.
- இந்த தலைவர்கள் ஏனைய குலங்களுடன் மூலதனங்கள் மற்றும் மத விடயங்களுக்காக போராடி தமது குழுவுக்கு பெறுபேறுகளைப் பகிர்நது கொள்வர்.
- இதில் காணக்கூடிய ஒற்றுமை யாதெனில் தலைவரின் குடும்பம் உட்பட ஏனையவர்களின் குடும்பங்களும் தரத்தில் ஒரே மாதிரியானவையாக இருந்தமையாகும்.
- உணவு மற்றும் ஏனைய தேவைளைப் பூர்த்தி செய்து கொள்வது தொர்பில் இச்சமூகம் தன்னிறைவு பெற்றிருந்தது.
- கோத்திர அரசுகளில் அரசியல் பயன்பாடுகளின் அடிப்படை பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது.

MS. IJAS AHAMED

கோத்திர அரசு முறைக்கான உதாரணங்கள்

1. **சிம்பாப்பே**

- "சோனா" எனும் கோத்திரம் சனத்தொகையில் 70% னை தனதாக்கியது
- மன்னியக்கா Manyika
- சிசுரு Zeru
- கோர்கோர் Korekore
- கரங்கா Karanga
- நடு Nadu

2.மதநம்பிக்கைகளே அரசுகளைத் தீர்மானிக்கும்.முழு அதிகாரமும் அந்தக் குழுவின் தலைவரின் ஒப்பந்தத்துடன் அரசியல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

3.ஆண்களே தலைமைத்துவம் 4.பரம்பரையாக தலைவர் தெரிவு இடம் பெறும்

2.தென்னாபிரிக்கா

3. உகண்டா

கிரேக்க நகர (புராதான) அரசு

- கோத்திர அரசு முறையின் பின்னர் அபிவிருத்தியடைந்த அரசியல் முறைமையில் ஒழுங்கமைந்த முதலாவது அரச முறையாகும்
- நவீன அரசுகளின் கோட்பாட்டிற்கு தளமாக அமைந்த அரச முறைமை
- கிரேக்க நகர அரச முறைமை நிச்சயிக்கப்பட்ட சிறிய நிலப் பிரதேசத்தில் ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சி முறையினைக் கொண்டு அபிவிருத்தியடைந்தது.(உதாரணம் எதென்ஸ்,ஸ்பாட்டா)
- கிரேக்கர்கள் அங்கு குடியிருந்த பரம்பரை மற்றும் பழங்குடியினரையும் (Clan and Tripe) சமுகமாக கொண்ட நிலத்தில் ஒழுங்கமைந்ததால் அரசியல் வாழ்வின் மையமாக அமைந்தன.
- கிரேக்க நகர அரசைச் சூழ அச்சமுகத்தின் அரசியல் பொருளாதாரம் அறிவு சார்ந்நத மற்றும் ஒழுக்கரீதியான வாழ்க்கை அம்சங்கள் சூழ்ந்திருந்தன.
- கிரேக்க நகர அரசுக்கு உரித்தான இரு கருத்தியல்கள் காணப்படுகின்றன.
  - I. நகர அரசு அரசியல்ரீதியாக ஒழுங்கமைந்த பிரிவுகளாக இருந்தமை
  - II. அவை ஒவ்வான்றும் சுயாதீனமான பிரிவுகளாக இருந்தமை
- வேறு சகல அரசுகளுடன் அந்நியமாதல் கிரேக்கர்களுக்கு பழக்கமில்லாததாக இருந்த அதேவேளை மக்கள் தொகை மற்றும் ஆள்புல ரீதியாக வரையறுக்கப்பட்ட சிறிய அரசியல் அலகுகளாக இருந்தமை
- இங்கு மக்களிடையே தமது அரசு தொடர்பில் மிக உயர்வான உணர்வு காணப்பட்டது
- நகரத்தின் மதமே அனைத்துப் பிரஜைகளினதும் மதமாக இருந்தது
- பெண்கள், அடிமைகள், குடியேற்றவாசிகளுக்கு பிரஜாவுரிமை கிடைக்கவில்லை

- பிரஜை என்பது சொத்துடைய ஆண்களுக்கான வரப்பிரசாதமாகியது.
- நேரடி ஜனநாயகம் நிலவிய எதென்ஸில் பிரஜைகள் என்பவர்கள் மக்களின் செயற்பாடுகளுக்காக உயிரோட்டமான பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்டது.
- தனிநபராட்சி முறை, சில்லோராட்சி முறை, நேரடி ஜனநாயக முறை ,ஏகாதிபத்திய ஆட்சி முறை முதலான அரசியல் மாதரிகள் இங்கு அபிவிருத்தியடைந்தன.
- கிரக்க நகர அரசுகள் ஜனநாயகம் மற்றும் பிரஜைகளுக்கான செயற்பாடுகளை மையப்படுத்தி தோற்றம் பெற்றமையினாலேயே அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றது.

அரசாட்சி முறை (முடியாட்சி முறை)

- அரசாட்சி என்பது பெரும்பாலும் பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமைகோரும், தனிநபரினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி முறையாகும்.
- இது உலகம் முழுவதும் கண்டு கொள்ளப்பட்ட அரச மாதிரியாகும்.
- அரசன் அல்லது அரசி ஆட்சிக்கு வருவது சம்பிரதாயப்படியாகும்.
- தெய்வீக வழியுரிமைக் கோட்பாடுகளில் அரசனுக்கு அரசாட்சி செய்வதற்கு இறைவனால் அதிகாரம் கிடைத்துள்ளது. என குறிப்பிட்டுள்ளமையினால் சர்வதிகார அரசாட்சி முறைகளில் தெய்வீக் வழியுரிமை அரசாட்சி பண்புகள் காணப்பட்டன.
- அரசாட்சியில் ஆட்சியாளருக்கு எல்லையற்ற அதிகாரம் கிடைத்ததோடு அவரின் அல்லது அவளின் தனிப்பட்ட கட்டளைகளால் உருவானது.
- சர்வதிகார அரசியல் நிறுவனங்கள் குறைவான அபிவிருத்தியிலேயே காணப்பட்டன. சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை நிருவாகம் மற்றும் யுத்த அதிகாரம் மன்னன் /இளவரசியிடம் குவிந்து காணப்பட்டமையே இதற்கு காரணமாகும்.
- அரசாட்சியில் "பிரஜைகள் என்ற எண்ணக் கரு காணப்படவில்லை. இதற்குப் பதிலாக "கீழ்பட்டவர்கள்" (அடிமைப்பட்டவர்கள்) என்றே காணப்பட்டது.
- கீழ்பட்டவர்களுக்கு நவீன பிரஜைகளை போல உரிமைகள் இருக்கவில்லை. அதற்கு பதிலாக அவர்களுக்கு கடமைகளே காணப்பட்டன.

தாராள (லிபரல்) ஜனநாயக அரசு

- வரையறுக்கப்பட்ட அரசு தொடர்பான எண்ணக் கருவே லிபரல் வாத்தின் அடிப்படை அரசியல் எண்ணக்கருவாகும். எதேச்சதிகார அரசுக்கு எதிராக மனித சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக 17ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலிருந்து பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசு என்பவற்றில் பரவலடைந்த அரசியல் கருத்தியலே லிபரல் தாராளவாத ஜனநாயக வாதமாகும்.
- லிபரல்வாதம் மற்றும் நவீன ஜனநாயகவாதம் என்பன ஒன்றுக்கொன்று சமமான வகையில் அபிவிருத்தியடைந்த அரசியல் எண்ணக்கருவாகும்.
- லிபரல்வாதம் நிலையான ஆட்சி முறையோடு தொடர்பான எண்ணக்கரு என்பதால் அது மக்களால் செய்யப்படும் ஆட்சியாகும்.
- லிபரல்வாதம் ஒருவகை நிலையான பொருளாதார முறையுடன் இணைந்த கருத்தியலாகும். அதாவது அது முதலாளித்துவ பொருளாதார முறையுடன் (கைத்தொழில் முதலாளித்துவம்) இணைந்த கருத்தியலாகும்.
- லிபரல்வாதம் ஜனாநாயக முதலாளித்துவத்தின் பொருளாதார முறையினையும், ஜனநாயக ஆட்சி முறையினையும ஒன்றிணைக்கின்றது.
- மக்களாட்சி தொடர்பான எண்ணக்கரு இதன் கீழ் முக்கியம் பெறுவதோடு மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்படும் ஆட்சி பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்கம் இருத்தல் லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் அடிப்படைப் பண்பாகும்.
- பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படுவதற்கு தேவையான அடிப்படை சமூக அரசியல் விடயங்கள் பின்வருமாறு

➢ தடைகளற்ற சுதந்திரம் / உடன்பாடான சுதந்திரம்

MS IJAS AHAMED

- சமத்துவம்
- பெரும்பான்மை ஆட்சி
- மக்களாட்சி
- யாப்புறுவாதம்
- சட்டத்தின் ஆட்சி
- நீதித்துறைச் சுதந்திரம்
- பொறுப்புடைய அரசாங்கம்
- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள்
- போட்டிகரமான கட்சி முறை
- ஊடக சுதந்திரம்
- மாற்றுக்கருத்து
- அமுக்கக்குழு
- பொதுஜன அபிப்பிராயம்
- சிவில் சமூக செயற்பாடு.

MS. IJAS AHAMED

சமவுடமைவாத அரசு

- கோட்பாடு மற்றும் கருத்தியலடிப்படையில் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற சமவுடமைவாத அரசு மாதரி கார்ள் மார்க்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டு 20 ஆம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்ததாகும்.
- முதலாளித்துவம் மற்றும் லிபரல்வாத அரச மாதிரிகளுக்கு மாற்றீடாக அமைந்நது.
- இது முதலாளித்துவத்தினால் சுரண்டப்பட்ட தொழிலாளர்களுக்காக முன்வைக்கப்பட்ட அரச மாதிரியாகும்
- உழைப்பு சுரண்டலற்ற, வகுப்பு வாதம் இல்லாத சமூகத்தை கட்டியெழுப்புவது இதன் பிரதான நோக்கம் ஆகும்.
- பௌதீக வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக மனிதனின் அடிப்படை தேவைகளை சமமான வகையில் பெற்றுக் கொடுத்தல். (கல்வி ,தொழில், வீடு, சுகாதாரம்)

- தனியார் முயற்சிக்குப் பதிலாக அரச ஆதிபத்தியம் நிலை நிறுத்தப்படும்
- வர்க்கங்களற்ற சமூகத்தில் அடக்கு முறைக் கருவியான அரசு தேவையற்றது. அது உதிர்ந்து விடும் என மார்க்ஸ்வாத கோட்பாடு குறிப்பிடுகின்றது.
- லிபரல் ஜனநாயக அரசிலிருந்து வேறுபட்டது. இதன் உரிமை தொழிலாளர் வர்க்கமும் தாழ்த்தப்பட்ட மக்களின் கட்டளையுமாகும்
- பல கட்சி முறைக்குப பதிலாக இங்கு ஒரு கட்சி முறையே காணப்படும்
- ரஷ்யா,சீனா வட கொரியா வியட்நாம் கம்போடியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் சில நாடுகள் சமவுடமை அரசினை பரிசீலித்துப் பாரத்துள்ளன.
- இறுதியாக சோவியத் யூனியன் (ஒன்றியம்) மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் சமவுடமைவாதம் வீழ்ச்சியடைந்த பின்னர். சமவுடமை அரசு லிபரல் ஜனநாயகவாதத்திற்கு மாற்றீடாக கருதப்படுவதில்லை

பாசிசவாத அரசு

- பாசிச வாதம் என்பது அரசின் உயரிய தன்மை, சிரேஷ்ட தன்மை மற்றும் எதேச்சதிகாரம்,இனவாதம்,இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாக் கொண்ட அரசியல் கருத்தியலாகும்.
- இது முதலில் 1920,1930 தசாப்தங்களில் இத்தாலி மற்றும் ஜேர்மனி போன்றவற்றில் தோற்றம் பெற்றது. முசோலினியும் ஹிட்லரும் ஐரோப்பிய பாசிசவாத்தின பிரதான தலைவர்களாவர்
- பாசிசவாத்தின் பிரதான கருத்தியலாக இருப்பது இனவாத பார்வையில் அரசு தொடர்பாக விபரிப்பதாகும். ஹிட்லர் குறிப்பிடுவதாவது " இனத்தின் சிருஸ்டியே அரசாகும்" என்றார்
- பாசிசத்தில் அரசு மற்றும் இனம் என்பது சமமானதாக கருதப்பட்டுள்ளமையை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.
- "அரசு நிகரற்ற தாபனம்" " அரசு சர்வ வல்லமை பொருந்திய தாபனம்" இவை பாசிசத்தின் பிரபல்யமான வரைவிலக்கணங்களாகும்.
- நீட்சே முன்வைத்த சூப்பர்மேன் (Super Man) "மாமனிதர்" என்ற எண்ணக்கரு பாசித்தின் அடிப்படை கருத்தியல் தொடர்பில் அதிகளவு தாக்கம் செலுத்தியுளள்து. இதன் மூலம் அரசின் உயரிய தன்மை உயரந்தது நிகரற்றது போன்றவற்றின் மூலம் அரசுக்கு நிகராகக்கூடிய நிறுவனங்களும் இல்லை என்பது விளங்குகின்றது.
- அரசு சமூகத்திற்கு மேலாலுள்ள நிறுவனமாகும்.
- அரசுக்கு ஆரம்பமோ முடிவோ இல்லாததினால் முக்காலம் பற்றிய விபரிப்பு கிடையாது என்பதுடன் அது நிலையானது என அவதானிக்கப்படுகின்றது.
- தனிநபர் விடுதலை என்பது அரசின் அதிகாரத்திற்கு தனிநபர் கட்டுப்படுவதிலேயே தங்கியுள்ளது.
- அரசே ஆட்சியளானாகும் ஆட்சியாளன் சர்வதிகாரமானவன் அறிவுடைய பண்புடைய வீரமுடைய மனித மாண்புடைய இராஜ தந்திரமுடையவனாக ஆட்சியாளன் காணபப்டுவதினால் தலைமைத்துவ வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

MS. IJAS AHAMED

- அரசியல் தாபனங்கள் தலைமைத்துவத்தின் புகழ் பரப்புவதாக இருக்க வேண்டும்
- மக்களின் அரசியல் பங்கு பற்றுதல் நிராகரிக்கப்படுகின்றது ஆயுதபலம் பாசிசத்தின் அடிப்டை. அரசு அரசுக்காவே அதாவது தங்களை தவிர்நத வேறு எந்த சமூக நோக்கமும் கிடையாது.

பாசிசத்தின் பண்புகள்

1) கொள்கை எதிர்ப்பு
2) தர்க்கரீதியற்ற தன்மை
3) மூடநம்பிக்கை
4) அரசின் தன்னிகரற்ற தன்மை
5) ஆக்கிரமிப்பு தன்மை பொருந்திய தேசியவாதம்
6) போர்ப்பிரியத்தன்மை
7) வன்முறையும் பயங்கரவாதமும்
8) தலைமைத்துவ வழிபாடு
9) அரசினால் கட்டுப்படுத்தப்படும் பொருளாதாரம்
10) சர்வதேச சட்டத்தையும் சமாதானத்தையும் எதிர்த்தல்

காலணித்துவ அரசு

- காலணித்துவ அரசு என்பதன் மூலம் அறியப்படுவது பிரித்தானியா பிரான்ஸ் ஒல்லாந்து போரத்துக்கல் போன்ற ஐரோப்பிய காலனித்துவ அதிகாரங்களுக்கு நேரடியாக கீழ்பட்டிருந்த ஐரோப்பா அல்லாத சமூகங்களில் அபிவிருத்தியடைந்த மாதிரியாகும். இந்த அரச மாதிரி வரலாற்றுரீதியாக 16 ஆம் நூற்றாண்டின் பின்னரே அபிவிருத்தியடைந்தது.
- (உதாரணம்) இலங்கையிலும் 16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே போர்த்துக்யேர் ஒல்லாந்தர் பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டு 1815 ஆம் ஆண்டிலிருந்து முழு நாடும் காலனித்துவதிற்குட்பட்டது.
- காலணித்துவ ஆட்சிக்கு முன்னர் காணப்பட்ட காலனித்துவ அரசுகள் ஒன்றில் இலங்கை புருனை இந்தோனேசியா அல்லது இந்தியா போன்றன நிலமானிய அரசுகளாக இருந்தன. இல்லையேல் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளைப் போல கோத்திர அரசுகளாக இருந்தன. காலனித்துவ அரசொன்றின் உருவாக்கத்தால் இந்த காலனித்துவ சமூக அரசியல் முறைமையில் கீழ் வரும் மாற்றங்கள் ஏற்பட்டன.
- பாரிய பிரதேசங்களை ஒரு அரசின் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தமையினால் காலணித்துவ அரசுகள் ஆரம்ப கால காலனித்துவ அரசுகளை விடவும் பாரிய நிலப்பரப்புக்களை கொண்ட அரசுகளாக மாற்றம் பெற்றன.
- காலனித்தவ அரசின் யுத்தச் செயற்பாடுகளினால் இவை இராணுவ அரசுகளாகவே அபிவிருத்தியடைந்திருந்தன. தேசிய சமூகத்திலேற்பட்ட புரட்சி மற்றும் எதிர்ப்புக்களை தடுப்பதற்கும் காலனித்துவ அரசுகள் யுத்த சக்திகளையும் ஆயுதப்படைகளையும் தொர்ந்தும் பேணிச் சென்றன.
- காலனணித்துவ அரசுகள் மத்தியமயப்படுத்தப்பட்ட முறையில் ஒழுங்கமைந்திருந்தன. காலனித்துவ ஆட்சியாளர்களினால் மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றினை கட்டியெழுப்பியமை இச்சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றமாகும். பின்னர் பின் காலனித்துவ அரசுகள் இந்தக் கட்மைப்பினை மையப்படுத்தியே கட்டியெழுப்பட்டன.
- காலணித்தவ சமூகத்தில் காலனித்துவ அரசு இராணுவ அதிகாரவாத அரசாகவே கட்டியெழுப்ப பட்டிருந்ததது. அது ஜனநாயக அரசும் அல்ல தேசிய சமூகத்தின் பிரதிநிதிகள் காலனித்துவ அரச கட்டமைப்பில் தேசிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவன்றி காலணித்துவ அரசின் பிரதிநிதிகளாகவே செயற்பட இணைத்துக் கொள்ளப்பட்டனர். காலனித்துவ அரசுக்கு சேவை செய்வதற்காகா அவர்களுக்கு நிலம், நிந்தகம் ,பதவிகள் மற்றும் நிதி ரீதியான சலுகைகளும் கிடைத்தன. காலனித்துவ அரசுக்காக வரியினைச் சேர்த்தல் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக் கொள்ளல் என்பனவே இத்தேசிய பிரதிநிதிகளிடம் பகிரப்பட்ட பிரதான விடயங்களாகும்.

MS. IJAS AHAMED

காலணித்துவ அரசின் பண்புகள்.

- ✓ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் அனைத்து வர்க்கங்களையும் உள்ளடக்கிய முழு சமுகத்தினையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
- ✓ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளினால் தீரமானிக்கப்படுவதில்லை.
- ✓ அந்நிய நாடொன்றின ஆளும் வர்க்கம் குடியேற் நாட்டு மக்களோடு கொள்ளும் உறவின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.
- ✓ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் எந்த வர்க்கத்தையும் தனது ஆட்சியின் பங்காளர்காளக கொண்டிருப்பதில்லை.
- ✓ காலணித்துவ ஆட்சி உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தனக்குச் சார்பாக உபயோகித்துக் கொள்ளும்.
- ✓ காலணித்துவ உயர் குழாமினரான நிலப்பிரபுத்துவ வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம் காலணித்துவத்திற்கெதிராக கிளர்ந்தெழும் சந்தரப்பம் உண்டு.
- ✓ காலணித்துவ அரசு குடியேற்ற நாட்டு வர்க்கங்களுக்கிடையில் ஐக்கியம், இணக்கப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும்
- ✓ காலணித்துவ நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டுவதில் நேரடியாக ஈடுபடுதல்.
- ✓ காலணித்துவ அரசு பொலிஸ்,சிறைக்கூடம் போன்ற ஒடுக்கு முறை அரச இயந்திரங்களைக் கொண்டு அடக்கு முறையைப் பிரயோகிக்கும்.

காலணித்துவ அரசால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சமுக மாற்றங்கள்

அரசியல் மாற்றங்கள்	சமுக மாற்றங்கள்
1.அரசின் ஆளுகையில் பாரிய பிரதேசம் காணப்படும் (உதாரணம்) இந்தியா,அவுஸ்ரேலியா	1.இராணுவ செயற்பாடுகளுடன் பழக்கப்படுதல்
2.யுத்த செயற்பாடுகளால் காலணித்துவ அரசுகள் இராணுவ அரசுகளாகவே வித்தியடைந்திருந்தன	2.அடக்கு முறை எதிர்ப்பும் தடுப்பு முறை எதிர் கொள்ளலும்
3.தேசிய சமுகம் புரட்சிகளை அடக்க யுத்த சக்தி ஆயுதப் படை பேணுதல் (உதாரணம்) இந்தியா	3.மத்தியமயப்படுத்திய ஆட்சிக்கு பழக்கப்படுதல்
4.மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பு அதிகாரம்	4.காலணித்துவ அரசின் பிரதிநிதிகளானமை
5.வரிமூலமாக நிதி சேகரிப்பு	5.காலணித்துவ அரசுக்கு சேவை செய்தல்
6.சட்டம் ஒழுங்கைப் பேணிக் கொள்ளல்	6.நிலம்,நிந்தகம்.பதவிகள் நிதிரீதியான சலுகைகள் கிடைத்தமை
	7.வரி செலுத்துதல் சட்டத்திற்கு ஒழுங்கமைந்திருத்தல்

பின்காலனித்துவ அரசு

பின்காலனித்துவ அரசு என்ற எண்ணக்கரு பாகிஸ்தானிய எழுத்தாளரான **ஹம்ஷா அலவி (Hamza Alavi)** என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டு **New Left Review** சஞ்சிகையில் வெளியிட்ட "**பாகிஸ்தான் பங்களாதேஷ் சமுகங்களில் பின் காலனித்துவ அரசு** (State in colonial societies Pakistan and Banaladesh) என்ற கட்டுரையிலேயே இவ்வெண்ணக்கரு அறிமுகமாகியது. இவரின் கருத்துக்களின் அடிப்படையில் பின் காலனித்துவ அரசின் பண்புகள் பின்வருமாறு

- ❖ பின் காலணித்துவ சமுகத்தில் காணப்படும் அரசுகள் அந்த சமுகத்தில் காணப்பட்ட காலனித்துவ கட்டமைப்புக்களை மேலும் முன்னோக்கி கொண்டு சென்றுள்ளமையாகும்.
- ❖ காலனித்துவ ஆட்சியில் கிடைத்த அரசியல் சுதந்திரம் அந்தக் கட்டமைப்புக்களில் இருந்து விடுபட்டு தனித்துச் செல்வதற்கு வாய்ப்பு வழங்கவில்லை.
- ❖ பின்காலனித்துவ அரசுகள் பெரும்பாலானவற்றில் ஜனநாயகம் பரிமாற்றம் சாத்தியமானதாகவோ அல்லது நிலைத்திருக்கதக்க வகையிலோ நடைபெறவில்லை

MS. IJAS AHAMED

இராணுவ புரட்சிகளின் மூலம் ஜனநாயகவாட்சி அமைப்புக்களை மாற்றியமைத்தல் மற்றும் அதிகாரவாட்சி முறை உருவாதல் என்பன இச் சமூகத்தின் பொதுப்பண்புகளாக காணப்படுகின்றன. இதிலிருந்து மாறுபட்டதாக இந்தியா இலங்கை போன்ற பின் காலணித்துவ நாடுகள் சிலவுள்ளன.

- ❖ பின் காலணித்துவ நாடுகளில் காணப்படும் விசேடமான பண்பு இந்த நாடுகளில் ஒப்பீட்டு ரீதியாக வலுவான மற்றும் பலமிகு இராணுவம், சிவில் நிருவாக கட்டமைப்பொன்று அரச இயந்திரத்தின் மையமாக தொழிற்படுவதாகும். இவை காலனித்தவ ஆட்சிகாலத்தில் கட்டியெழுப்பட்டவையாகும். காலனித்துவவாத்தில் பெற்றுக் கொண்ட அரசியல் சுதந்திரத்தினால் இந்தக் கட்டமைப்புக்கள் மாற்றப்படவில்லை இவை கட்சி மற்றும் சிவில் அரசியல் நிறுவனங்களுக்கு மேலான அதிகாரமிக்கவையாகும்.
- ❖ அரசியல் கட்சி சிவில் நிறுவனங்களுக்கு மேலான அதிகாரமுடைய இராணுவம் மற்றும் படி நிலைவாத கட்டமைப்பொன்று தோற்றம் பெறல் பின் காலனித்துவ அரசு ஜனநாயகப் பரிமாற்றத்தினை நோக்கிய பயணத்தில் காணப்படும் கட்டமைப்புரீதியான தடையாகும்

நவதாராண்மைவாத அரசு

பொருளாதாரப் பின்புலம்

- பொதுநல அரசின் பின்னடைவும் உலக முதலாளித்துவ பொருளாதார எழுச்சியும் உலக மயமாக்கத்தின் தோற்றமும் உருவாக்கிய புதியதொரு எண்ணக்கருவே நவதாராண்மைவாத அரசாகும்.
- இந்தப் பின்புலத்தில் ஆசிய அரசுகளின் தேசிய எல்லைகளை தாண்டி சந்தைப் பொருளாதார முறையொன்று தோற்றம் பெற்றது.
- இந்தப் பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ பொருளதார முறையாக செயற்பட்டதனை அடிப்படையாக்க கொண்டு உலகமயமாக்கல் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது.
- முதலாளித்துவ அரசின் ஆரம்பத்தில் தலையிடாக் கொள்கையை பொருளாதாரத்தில் அரசு கடைப்பிடித்தாலும் நலன்புரிவாதத்தில் அது நலிவடைந்தது. எனினும் 1960களில் அரசின் நலன்புரிவாதம் வீழ்ச்சியடைய முதலாளித்துவத்தோடு மட்டும் சுருங்கிய அரசானது நவதாராளவாத அரசாக மாறியது. ஆகவே அரச நிருவாகத்தை மட்டும் செயற்படுத்துவதே நவதாராண்மைவாதமாகும்.
- முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டதன் காணமாக அரசு பொருளாதார நடவடிக்கைளில் விலகியிருத்தல் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப சந்தையை திறந்துவிட வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டதால் சர்வதேச நிறுவனங்களின் ஆதிக்கத்திற்குட்பட வேண்டியேற்பட்டது. இதனால் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணயநிதியம். மற்றும் பல்தேசிய கம்பனிகள் போன்றவற்றால் மேற்கொள்ளப்பட்டன. இதனால்.
  - ➢ சுதந்திர சந்தைக்கான சூழலை ஏற்படுத்தல்.
  - ➢ நிதியை நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதே அரசின் பணிகளானது.

அரசியல் பின்புலம்

- நவதாரளவாத கருத்தை முன்வைத்தவர்கள் றொபட் நோசிக், பெட்றிக்வோன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.
- நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரச அதிகாரமானது மிகவும் குறைந்தளவில் பயன்படுத்தப்படவேண்டும். Robert Nozik
- அரச அதிகாரம் பொலிஸ் அதிகாரம் ஒன்றிற்கு மேற்பட்டதாக இருக்க கூடாது. நபர்களின் சொத்து தொர்பான உரிமை மிகவும் முக்கியமானது என்பதால் இவ்வுரிமையினை இல்லாது செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

- அமுக்கத்திற்குட்பட்டவர்களின் வாழ்வுரிமைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பாதுகாத்தல்
- நலன்புரி திட்டங்களை முற்றாக உதிர்த்தல்
- அரசின் தலையீடானது சமூக அரசியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்துகின்றது.

MS. IJAS AHAMED

குறைந்த பட்ச அரசு எண்ணக்கரு

- இதன் மூலம் அரச நலன்புரி வாத வரலாற்றுப்பணியினை முடிவுக்கு கொண்ட வந்து முதலாளித்தவ முறையின் உண்மையான முதலாளித்தவ வாதங்களை மீண்டும் எழுச்சிபெறல் 20ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் குறைந்த பட்ச அரசு (minimalist state) எண்ணக்கருவின் தோற்றத்தோடு ஆரம்பமானது.
- குறைந்த பட்ச அரசு கொள்கையினால் மீண்டுமொருமுறை அரசின் பணிகளை வரையறுத்தல் என்ற குறைத்தலை காண முடிகின்றது. எனினும் இது தலையிடா அரசு போலன்றி பொருளாதார விடயங்களில் விலகியிருத்தல் அல்லது தலையிடாமல் இருப்பது அல்ல.
- இதில் சமூக அரசியல் செயற்பாடுகளை முகாமை செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அரசு தலையிடுகின்றது. எனினம் இது நலன்புரி அரசினைப்போல பரந்த மற்றும் இலகு தலையிடுதல் அல்ல இதன்படி அரச தலையிடாவாதம் மற்றும் நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்குமிடையிலான நிலையாகவே குறைந்த பட்ச அரசினை இனங்காண முடியும்.

அரசு தொடர்பான எண்ணக்கருக்கள்

அரசும் இறைமையும்.

"வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல்ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமே" அரசாகும்

இறைமை என்பது "சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத பிரஜைகள் மற்றும் குடிகள் மீது செலுத்தப்படும் உயர்வான அதிகாரமாகும்"

- இறைமை என்பதன் பொருள் மீயுயர் அதிகாரம் என்பதாகும். அதாவது அரசு பெற்றிருக்கும் உயர்வான அதிகாரமாகும்.
- இப்பதத்தினை முதன் முதலில் அரசறிவியலில் அறிமுகப்படுத்தியவர் ஜீன்போடின் ஆவார் (Jean Boadin) இவர் இறைமையை சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத, பிரஜைகள் மற்றும் குடிகள் மீது செலுத்தப்படும் அரசுக்குரிய உயர்வான அதிகாரம் என்றார். இறைமை வேறு எந்த சமூகத்திற்கும் அடிபணியமாட்டாது.
- இதன்படி இறைமை இருவகைப்படும்.
  I. உள்ளிறைமை
  II. வெளியிறைமை
- உள்ளிறைமை என்பது எந்தவொரு சுதந்திர அரசும் தமது அரசினுள் வாழும் மக்களின் அடிபணிவை பெற்றுக் கொள்வதற்கான சட்ட அதிகாரத்தை பெற்றுள்ளது என்பதாகும்.
- வெளியிறைமை என்பது வேறு எந்த இறைமை அதிகாரத்திற்கும் கீழ்நிலைப்படாது இருத்தலாகும். இதன்படி இறைமைமிகு அரசு தமத வெளிநாட்டுக் கொள்கைகளை அழுத்தங்கள் இன்றி வைத்துக் கொள்வதற்கான திறனாகும்.
- இறைமை அதிகாரம் நிலையான, அனைத்தான்மை வாய்ந்த, பிரிக்கப்பட முடியாத,மைமாற்ற முடியாத, கையளிக்க முடியாத ஒன்றாக கருதப்படுகின்றது.
- இறைமை பற்றிய சமகால எண்ணக்கரு சமஸ்டிவாதம் மற்றும் உலக மயமாக்கலோடு பாரிய சவாலுக்குட்பட்டுள்ளது. தேசிய அரசொன்றினுள் வாழும் பல்வேறு இனக்குழுக்களை ஒன்றிணைப்பதற்காக இறைமை அதிகாரத்தினை பகிர்ந்தளிக்கும் போக்கொன்று விருத்தியடைந்து வருகின்றது.
- சம காலத்தில் பொதுக் கொள்கைகைள் தேசிய மட்ட இறைமை அலகுகள் மூலம் தீர்மானிக்கப்படுவதிலும் பார்க்க உயர் தேசிய அமைப்புக்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.
- சமகாலத்தில் மூலதனப்பாய்ச்சலுடன் ஏற்பட்ட சந்தையினை மையப்படுத்திய உலக வர்த்தக அமைப்புக்கள் போன்ற நிறுவனங்கள், மனிதவுரிமைகள் ,சட்டங்கள் ,சம்பிரதாயங்கள்

MS. IJAS AHAMED

மற்றும் குற்றங்கள் என்றால் என்ன என்பதை தீர்மானிப்பதிலும் இறைமை சவாலுக்குட்பட்டள்ளது.

- தேசிய அரசுகள் என்பது உலக உயர் தேசிய நிறுவனங்களில் எடுக்கப்படும் கொள்கைகளை தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் முகவர்களாக மாறியுள்ளது. என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.
- சமகாலத்தில் பிரபல அரசுகளின இறைமை அபிவிருத்தியடைந்தாலும் நலிவான அரசுகளின் இறைமை அடிபட்டுச் சென்றுள்ளது.

அரசும் பிரஜையும்

- பிரஜை என்பதன் பொருள் "நகரத்தில் வாழ்பவன்" என்பதாகும்.அதன் தற்போதைய அர்த்தம் "அரசின் உறுப்பினன் என்பதாகும்"
- நபர்கள் தமது பொது வாழ்க்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்கு பற்றும் முறைக்கேற்ப "பிரஜை" என்பது தீர்மானிக்கப்படுகின்றது.
- அரிஸ்டோட்டிலின் கருத்திற்கேற்ப பிரஜை என்பவர் அரசின் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்குபற்றும் நபராவார். இவர் இந்த கருத்தினை சிறிய கிரேக்க நகர அரசுகளின் பின்புலத்தில் இருந்தே முன்வைத்துள்ளார்.
- நவீன சிக்கல்மிக்க அரசு முறையில் கிரேக்க நகர அரசு முறையினைப் போன்று அரச நிருவாக செயற்பாடுகளில் பிரசைகள் நேரடியாக பங்குபற்ற முடியாது. இது மக்கள் பிரதிநிதித்துவத்தின் வழிமுறையொன்றாகும்.
- நவீன ஜனநாயக அரசுகளில் சட்ட உருவாக்குனர்கள் மற்றும் நிறைவேற்றுனர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லது மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய பிரஜைகள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது
- தற்போது அரசு மற்றும் பிரஜைகளுக்கிடையின தொடர்புகளுக்க இரு முக்கியமான பண்புகள் காணப்படுகின்றன.
  I. பிரஜைகளின் அரசியல் உரிமைகள் (வாக்களித்தல்,தேர்தலில் போட்டியிடல்,அரசாங்கத்தை விமர்சித்தல், அரசாங்க பதவிகளை வகித்தல்)
  II. பிரஜைகளின் அரசியல் கடமைகள் (அரசுக்கு கட்டுப்படல் ,வரி செலுத்துதல்)
- அரசொன்றின் ஆள்புலத்தில் வாழ்கின்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கக்கூடியதும், இல்லாதொழிக்க கூடியதுமான ஒரு நிறுவனமே அரசாகும். உண்மையில் நடைமுறையில் அரசை நிர்வகிப்பவர்களால் தீர்மானிக்க முடியும்
- TH. மார்ஷல் "சமூக பிஜராஜாவுரிமை என்ற எண்ணக்கருவை பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- வீடொன்றை உரிமையாக்கிக் கொள்ள, தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ளவுமான அந்தஸ்துடையவர்களே பிரஜைகளாவர். (TH. மார்ஷல்)

அரசுக்கு பிரஜைகள் ஏன் அடிபணியவேண்டும்.

- அனைத்துப் பிரஜைகளுக்கும் நலன்புரி வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது அரசின் இறுதி நோக்கமாகும். - அரிஸ்டோட்டில்
- பிரஜைகளே அரசினை உருவாக்கி அதற்கு அடிபணிவை காட்டுவதற்கு உடன் பட்டமையினால் அரசு பாதுகாப்பினை வழங்குகின்றது.
- அரசு பொது விருப்பத்தின் அடிப்படையில் உருவானது. அதன் மூலம் பொதுச் சித்தமே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. இதனால் பிரசை அரசுக்கு அடிபணியவேண்டும். - ரூசோ
- சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி "பிரஜைகள் அரசை உருவாக்கிக் கொண்டதோடு அடிபணிவை காட்டுவதற்கு உடன்பாடு கொண்டனர்"
- லிபரல்வாதக் கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி "பிரஜைகளின் இயற்கை உரிமைகளை பாதுகாத்து கொடுப்பது அரசு என்பதால் பிரஜைகள் அரசுக்கு அடிபணிய வேண்டும்" என்கின்றனர்.

MS. IJAS AHAMED

அரசு, அரசாங்கம், மற்றும் ஆட்சி முறை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்

வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல்ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமே" அரசாகும்

அரசின் அல்லது மக்களின் விருப்பங்களை கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்ட வரும் பிரதி நிதி ஆகும்

சகல சமூகத்திலும் காணப்படும் அடிப்படை மற்றும் மையமான அரசியல் நிறுவனம் அரசும் அரசாங்கமும் ஆகும். சமூகத்தில் காணப்படும் ஏனைய அரசயில் நிறுவனங்களின் தோற்றமும் அரசு மற்றும் அரசாங்கத்தால் நடை பெற்றுள்ளது.

உதாரணம் -

- கோட்பாட்டுரீதியாக அரசைப் பிரிக்க முடியாது,கண்ணுக்கப் புலப்படாதது ஆனால் அரசாங்கம் நடை முறைச் செயற்பாட்டின் கட்புலனாகும் நிறுவனமாகும்.
- அரசாஙடகம் என்பது அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரதி நிதி மட்டுமேயாகும்.
- அரசு முழுச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஆனால் அரசாங்கம் குடிமக்களின் ஒர் பகுதியினரின் ஆதரவைப் பெற்றுக் கொளளும் அரசியல் நிறுவனமாகும்.
- அரசு மாற்றமடையாத நிலையான நிறுவனமாகும் ஆனால் அரசாங்கம் அரசுக்கு அரசு வேறுபடும்
- அரசு பரிபூரணகூறாக இருக்கும் போது அரசாங்கம் அரசின் ஒரு பகுதி மட்டுமே ஆகும்
- அரசு இறைமையின் உரிமையாளன் ஆனால் அரசாங்கம் அரசினால் ஒப்படைக்கப்படும் அதிகாரத்தை மட்டுமே பெறுகின்றது.
- அரசின் இருப்புக்கு நிச்சயமான ஆள்புல எல்லைகள் அவசியமாகும் ஆனால் அரசாங்கம் அரசின் எல்லைக்கு அப்பால் அல்லது வெளியேயும் அமைக்கப்படலாம்.
- குடிமக்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ முடியாது ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழலாம்.

ஆட்சி முறை (Regime)

⊕ ஆட்சி முறை என்ற எண்ணக்கரு அரசாங்கம் என்பதற்கு சற்று நெருக்கமுடையதாகும்.அரசாங்கம் என்பது அரசின் செயற்பாடுகளை செய்வதற்கு பொதுமக்களால் நியமிக்கப்படும் நிறுவன கட்டமைப்பு ஆகும்.

⊕ ஒவ்வொரு அரசாங்கமும் தமது கருத்தியல்கள்,சமூக அடிப்படை மற்றும் தலைமைத்துவம் தொடர்பில் காணப்படும் விசேட தன்மையினை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தும் போது ஆட்சி முறை என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம்

→ அரசாங்கத்தின் தலைமைத்துவதற்கு ஏற்ப அடையாளப்படுத்தல்
உதாரணம்: ராஜபக்ஷ ஆட்சி, ரணில் ஆட்சி ,மோடி ஆட்சி

→ அரசாங்கத்தின் ஒழுங்கமைப்பிற்கேற்ப உருவாகும் ஆட்சி
உதாரணம்: ஒற்றையாட்சி ,சமஷ்டி ஆட்சி

→ அரசாங்கத்தின் கருத்தியல்களின் அடிப்படையில்
உதாரணம்: அனைத்தான்மை ஆட்சி, சமவுடமைவாத ஆட்சி, நலன்புரிவாத ஆட்சி

MS.IJAS AHAMED

வினாக்கள்

1.இறைமை இரு வகைப்படும் அவற்றைக் குறிப்பிடுக?

2.அரசுக்கு பிரஜைகள் அடிபணிவை காட்ட வேண்டும் என கூறும் கோட்பாட்டாளர்கள் இருவரைப் பெயரிடுக.

3.அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்க

அரசின் இயல்பு தொர்பான கோட்பாட்டு அணுகுமுறை

சமூக ஒப்பந்தவாதம்.

மத்திய கால ஐரோப்பாவில் அதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காக தெய்வீக உரிமைக் கோட்பாடு கீழ் நிலையடைந்த இடைவெளியை நிரப்பவே சமூக ஒப்பந்த கோட்பாடு தோற்றம் பெற்றது.

இதுவரை தானாக தோன்றியதாக கூறப்பட்ட அரசு என்ற கருத்துக்கு பதிலாக "சமூகத்திலேற்பட்ட உடன்பாட்டின் விளைவு" என்ற புதிய விளக்கத்தினைக் கொடுத்தது.

இந்த கருத்தியலை கோட்பாடாக முன்வைத்தவர்கள் தோமஸ் ஹொப்ஸ், ஜோன்லொக், ஜீன் ஜெக் ரூசோ ஆகிய மூவருமாவர்.

தோமஸ் ஹொப்ஸ் (1588-1679)

இயற்கை நிலையும் மனித தன்மையும்.

அரசு உருவாகுவதற்கு முன்னர் மனிதன் இயற்கை நிலையில் வாழ்ந்தான் என்று ஹொப்ஸ் கூறினார்.மனிதன் தனது சுயநலத்தை மட்டும் கருத்தில் கொண்டு வாழ்ந்தான் அவ் இயற்கை நிலையானது ஒரு போராட்ட நிலையாக காணப்பட்டதென்றும் மனித வாழ்க்கை சுயநலமும்,இழிவும்,மிருகத்தன்மையும் குறுகிய ஆயுளும் உடையதாக இருந்தது. சட்டம் ஒழுங்க என்பவை காணப்படவில்லை மக்களை வழி நடத்திச் செல்லும் அதிகாரி எவரும் அப்போது இருக்கவில்லை. அமைதியின்மையும் அரசற்ற அராஜக நிலையுமே காணப்பட்டது

சமூக ஒப்பந்தம்.மேற்குறிப்பிட்ட இயற்கை நிலையினால் அவதிப்பட்ட மக்கள் தன்னை போன்று அவதிப்பட்ட மக்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டான். இந்த ஒப்பந்ததிற்கிணங்க இயற்கை நிலையில் வாழ்ந்த அனைவரும் தமது பாதுகாப்பின் பொருட்டு தாம் உருவாக்கிய சிவில் ஆட்சிளாரிடம் அதிகாரம் அனைத்தையும் ஒப்டைத்தனர்.

இந்த ஒப்படைப்பு பூரணமானதாகவும் மாற்ற முடியாததாகவம் இருந்தது. இந்த ஒப்பந்தத்தில் ஆட்சியாளளன் ஒரு பங்கு தாரனாக இருந்ததில்லை.தான் செயற்படுத்தும் அதிகாரம் தொர்பில் மக்களுக்கு பொறுப்பு சொல்ல கடமைப்பாடு இல்லாத ஆட்சியாளன் ஒருவனிடம் மக்கள் தங்கள் அதிகாரத்தை தங்களது சொந்த விருப்படி ஒப்படைத்தனர். அவன் இட்ட கட்டளையே சட்டமாகும். குடிமக்களுடைய வாழ்வும் சாவும் அவருடய அதிகாரத்திற்குட்பட்டிருந்தன.

இங்கு மக்கள் ஆட்சியின் அடிப்படையில் அனைத்தாற்றலுடைய சர்வதிகார அரசொன்று இவ்வாறு உருவாக்கப்பட்டது.

r%f xg;ge;j Nfhl;ghl;lhsu;fspd; gpujhd E}y;fs;

- **n`hg;]; - nytpahjd;**
- **nyhf; - rptpy; murhq;fj;jpd; ,U cld;gbf;iffs;**
- **&Nrh - r%f xg;ge;jk**

MS. IJAS AHAMED

ஜோன் லொக் (1632-1704)

லொக் என்பவரும் அரசின் தோற்றம் பற்றிய கொள்கைக்கு சமூக ஒப்பந்ததையே அடிப்படையாகக் கொண்டுள்ளார்.ஆயினும் மனித தன்மை பற்றியும் அவர் கொண்ட கருத்தும் இயற்கை நிலை பற்றி அவர் கொண்ட எண்ணக்கருவும் ஹொப்ஸின் கருத்துக்களில் இருந்து முற்றாக வேறுபட்டவை.

இயற்கை நிலையும் மனித தன்மையும்

மனிதன் அடிப்படையில் நல்லவன் என்பதே லொக்கின் கருத்து. இயற்கை அருளிய சில உரிமைகளை அவன் பெற்றிருந்தான். இவ்வுரிமைகளுள் மிக முக்கியமானவை உயிர்வாழ்வதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும் சொத்து வைத்திருப்பதற்கும் உரிய உரிமைகளாகும். மனிதன் தனது உழைப்பை இயற்கையோடு இணைப்பதன் விளைவாகவே சொத்துரிமை பிறக்கின்றது. என லொக் அவ்வுரிமைக்கு விளக்கம் கொடுத்தார். தொடக்கத்தில் இயற்கை நிலையிலே மனிதன் அமைதியாக வாழ்க்கை நடத்தினான்.அவன் தன்னுடைய உரிமைகளை தங்கு தடையின்றி அனுபவித்தான் ஆயினும் முக்கியமாக சொத்துடைமை பற்றிச் சச்சரவுகள் படிப்படியாக தலைதூக்க தொடங்கின அதனால் அமைதி குலைந்தது. வாழ்க்கைக்கும் சுதந்திரத்திற்கும் சொத்துடைமைக்கும் இடையூறு விளைந்தது.

சமூக ஒப்பந்தம்

இக்கட்டத்தில் இயற்கை நிலையில் வாழ்ந்து வந்த மனிதர் ஓர் ஒப்பந்தம் செய்தனர். இந்த ஒப்பந்தத்தில் இரண்டு அம்சங்கள் உண்டு அனைவருக்கும் உடன்பாடான பொது நியதிகளுக்கு இணங்கி வாழ்வதற்கு மனிதர் உடன்படுகின்ற ஒரு குடியியற் சமூகத்தை இவ் ஒப்பந்தம் நிறுவியது. அத்தோடு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலநாட்டுவதற்கு போதுமளவு அதிகாரங்களைப் பெற்ற ஓர் அரசையும் அது நிறுவியது. ஒப்பந்ததை செய்யும் இரு கட்சியாளர்களுள் ஒரு கட்சியாளர் மக்களாவர். மற்ற கட்சியாளர் ஆட்சியாளனோ ஆட்சியாளர்களோ ஆவர். இயற்கை தங்களுக்கு அருளிய அதிகாரம் எதுவோ அதனை ஆட்சிளாணிடம் மக்கள் ஒப்படைக்கின்றனர். ஆட்சியாளனோ தனது கடமைகளை நிறைவேற்று முகமாக இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு உத்தரவாதம் செய்கின்றான்.

மக்கள் தங்களுடைய அதிகாரம் அனைத்தையுமே ஆட்சியாளனிடம் ஒப்படைக்கவில்லை. அவ்வதிகாரத்தில் ஒரு பாகத்தை தங்களிடம் வைத்துக் கொள்கின்றார்கள். இதனால் ஆட்சியாளன் எல்லாம் வல்லவன் அல்ல அவனுடைய அதிகாரங்கள் வரையறைக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை. மக்கள் அமைதியாக தங்களுடைய இயற்கையான உரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான நிலைமைகளை உருவாக்குவதும் நிலை நிறுத்துவதும் ஆட்சிளானின் கடமையாகும்.

இவ்வாறு லொக் வர்ணித்தவாறு சமூக ஒப்பந்தம் ஒன்றின் மூலம் மக்களால் உருவாக்கப்பட்டதே அரசு அது மக்களிடம் இருந்தே தனது அதிகாரத்தைப் பெறுகின்றது. லொக்கின் அரச கொள்கையானது **தாராள மக்களாட்சி கோட்பாட்டிற்கு ஓர் உறுதுணையாக அமைந்தது**.

ரூசோ

18ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ரூசோ தனது சமூக ஒப்பந்தக் கொள்கை பற்றிய கருத்தை வெளியிட்டார். அவர் ஜெனிவாவில் பிறந்தாலும் பிரான்சிய தத்துவஞானியாகவே கருதப்படுகின்றார்.1789 இல் பிரான்சியப்புரட்சி தொடங்குமுன் பிரான்சிலே தீவிரமாக இடம் பெற்று வந்த வாதப்பிரதிவாதங்களில் பங்குபற்றினார்

ரூசோவின் இயற்கை நிலை

ரூசோவும் தனக்கு முன்னர் இருந்த ஹொப்ஸ், லொக் ஆகியோரின் முன்மாதிரியைப் பின்பற்றி சமூகத்திற்கும் அரசிற்கும் முற்பட்ட இயற்கை நிலை பற்றிய வர்ணனையோடு தனது கொள்கையை விளக்கத் தொடங்குகின்றார். அவரின் இயற்கை நிலையில் உள்ள மனிதரை ஹொப்ஸ் கருதியதைப் போன்று சுயநலமுடைய விலங்காக அவர் கருதவில்லை. இவரின் கருத்துப்டி அம் மக்கள் இயற்கை சட்டங்களுக்கு அமைய வாழ்ந்து வந்தனர். அவர்கள் இயற்கையாகவே பகைவர்கள் அல்ல அவர்கள் சண்டையிடவும் இல்லை. அவர்களின் தேவை குறைவானவை அதனால் அதனை திருப்தி செய்தலும் எளிதாக இருந்தது. தம்மிடம் அன்பும் பிறரிடம் இரக்கமும் ஆகிய இரு உணர்ச்சிகளே அவர்களை வழி நடத்தியது.

MS. IJAS AHAMED

சமூக ஒப்பந்தம்.

சமூக ஒப்பந்தம். ஒன்றின் மூலம் இந்த இயற்கை நிலையை ஒரு முடிவுக்கு கொண்டு வர அவர்கள் தீர்மானித்தனர். காரணம் ஒரு சமூகத்தை உருவாக்குவதன் மூலம் தங்களது இயற்கைத் திறனை மேலும் உயர்த்திக் கொள்ளலாம். அபிவிருத்தி செய்து கொள்ளலாம். என்று கருதியமையிலாகும். ஆனால் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர் அனைவரும் தங்களிடையே ஓர் ஒப்பந்தினைச் செய்து தங்களை ஓர் கூட்டுக் குழவாக அமைத்துக் கொள்கின்றனர். இக் கூட்டுக் குழுவே இறையாக அமைகின்றது.(இறைமை) இக்குழுவின் ஓர் உறுப்பினன் என்ற வகையில் ஒவ்வாருவனும் இறையின் ஒரு பகுதியாக இருக்கின்றான். அதேவேளை அவன் ஒரு குடிமகன் என்ற வகையில் இறையின் குடிமகனாகவும் இருக்கின்றான். இக்கூட்டுக் குழுவானது பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அரசுச் சமூகம், அரசு இறை, அதிகாரமும் மக்களும் என்ற பெயர்கள் வழங்கப்பட்டன.

பொதுவிருப்பம்/பொதுச்சித்தம்.

இக் கூட்டுக் குழுவே பொது விருப்பம் என்று ரூசோவால் அழைக்கப்பட்டது. பொது விருப்பம் என்ற எண்ணக்கருவை விளங்கிக் கொள்வது கடினமானது. அது எல்லா மக்களினதும் கூட்டு விருப்பம் அன்று, கூட்டு விருப்பத்தின் சாராம்சமேயாகும். அது ஓர் தாரமீக சக்தியாகவும் அனைத்திற்கும் மேலானதாகவும் அமைந்திருக்கின்றது. ரூசோ மக்களை இறைமை உடையவர்களாக ஆக்கினார்.

மாக்சிச வாதம்.

- ⊗ மார்க்ஸ் வாதம் என்பது பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு வரலாறு மற்றும் சமுகம் பற்றி விபரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட பரந்த தத்துவமாகும்.
- ⊗ கார்ள் மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் என்போரால் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கோட்பாடு அரசின் தோற்றம் பரவல் மற்றும் எதிர்காலம் பற்றி முன்னர் காணப்படாத வகையான விளக்கம் ஒன்றினை வழங்கியுள்ளது.
- ⊗ மனித வரலாறானது வர்க்க போராட்ட வரலாறாகவே இது வரை காணப்பட்டதாக இவர்கள் குறிப்பிட்டனர். வரலாற்றில் காணப்பட்ட எல்லாவித சமூகத்திலும் காணப்பட்ட எதிர்புக்களை அடக்குவதற்காக அரசு என்ற தாபனத்தை சொத்துடைய வர்க்கம் பயன்படுத்தியது. என்பதால் "அரசு சொத்துடையவர்களின் கருவி" என்றும் "அரசு அடக்கு முறை நிறுவனமாக" செயற்படுவதாகவும் இவர்கள் குறிப்பிட்டனர்.
- ⊗ புராதான கம்யூனிச யுகம், அடிமையுகம், நிலமானிய யுகம், முதலாளிய யுகம் சமவுடமைவாத யுகம் போன்றவற்றால் சமூகத்தின் வரலாறு வளர்ச்சியடைந்துள்ளதோடு வளர்ச்சியடைகின்றது என மார்க்ஸ்வாதம் குறிப்பிடுகின்றது. அரசு அந்தந்த வரலாற்று காலங்களுக்கேற்ப பரவலடைந்துள்ளது.

புராதான கம்யுனிசம்

இக்காலத்தில் மக்கள் காடுகளில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். உணவுத் தேவையும் பாதுகாப்புத் தேவையும் இவர்களது பிரதான தேவையாக இருந்தது. உற்பத்தி சாதனங்கள் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருந்தன. மக்கள் அனைவரும் இங்க கூட்டதாக உழைத்தனர். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உடனடியாக பயன்படுத்தும் வகையில் உள்ளமையால் சேமிப்போ சொத்துடமையோ இருக்கவில்லை. சொத்துடைமை இல்லாததால் அதன் அடிப்படையில் அமைந்த வர்க்க வேறுபாடுகளும் இருக்கவில்லை.

அடிமைமுறைச் சமுதாயம்

இச்சமுதாயத்தில் அடிமை எஜமான் என்கின்ற இரு வர்க்கங்கள் காணப்பட்டன. இதில் எஜமான் வர்க்கம் உற்பத்தி காரணிகளுக்குச் சொந்தக்கார வர்க்கமாகவும் அடிமை வர்க்கம் உற்பத்தி காரணிகள் எதுவுமற்ற உழைக்கும் வர்க்கமாகவும் காணப்பட்டன. இங்கு வர்க்க வேறபாடுகள் அரசின் தேவையை ஏற்படுத்தியது. அடிமைகளை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக எஜமான் வர்க்த்தால் அரசு தோற்றுவிக்கப்பட்டது. என மார்க்ஸ் கூறுகின்றார்.

MS. IJAS AHAMED

நில பிரபுத்துவ சமுதாயம்

இச்சமுதாயத்தில் நிலப்பிரபு குடியானவன் என்ற இருவர்க்கங்கள் காணப்பட்டன. நிலப்பிரபு உற்பத்திக் காரணிகளுக்கு சொந்தக்காரனான உடைமையாளன் வர்க்கமாக விளங்கினான். குடியானவன் உழைக்கும் வர்க்கமாக விளங்கினான். இங்கு காணப்பட்ட அரசும் குடியானவனை அடக்கி ஒடுக்கி நிலப்பிரபுக்களின் நலன் பேணும் அரசாக காணப்பட்டது.

முதலாளித்துவ சமுதாயம்

கைத்தொழில் உற்பத்தியின் வளர்ச்சி நிலப்பிரபுத்துவ சமூதாயத்தை சிதைத்து முதலாளித்துவ சமூதாயத்தை தோற்றுவித்தது. நவீன தொழினுட்பங்கள் தொழிலாளர்களின் தேவையை வேண்டி நின்றதால் குடியானவரகள் தொழிலாளர்களாக மாறினர். இங்கு காணப்பட்ட அரசும் உடைமைகளற்ற தொழிலாளர் வர்க்கத்ததை அடக்கி ஒடுக்கி முதலாளித்துவ வர்க்கத்தின் நலன் பேண் அரசாகக் காணப்பட்டது.

சோசலிச சமுதாயம்

தொழிலாளர் வர்க்கத்தின் சர்வதிகார அரசு நிலவும் சோசலிச சமுதாயத்திலும் வர்க்கங்கள் இருக்கும் ஆனால் ஆட்சியில் தொழிலாளர் வர்க்கமே இருக்கும் முதலாளித்துவ வர்க்கம் மீண்டும் எழுவதை நசுக்கும் வகையிலேயே ஆட்சியில் இருக்கும் அரசு தொழிலாளர் வர்க்கத்தின் சர்வதிகார அரசாக இருக்கும் இச்சமுதாயத்தில் சோசலிச நிர்மான வேலைதிட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் இதனூடாக வர்க்கங்களற்ற சமுதாயத்தை நோக்கி சோசலிச சமுதாயம் முன்னேறும்

கம்யுனிச சமுதாயம்

சோசலிச சமுதாய வளர்ச்சியில் கம்யுனிச சமுதாயம் தோன்றும் போது வர்க்கங்கள் இல்லாமல் போய்விடும் இதனால் அரசின் தேவையும் இல்லாமல் போக இச்சமுதாயத்தின் தோற்றத்துடன் அரசும் உதிர்ந்து மறைந்து விடும்.

லிபரல்வாதம் (தாராண்மைவாதம்.)

- ⊕ 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரை நூற்றாண்டில் இருந்து மேற்கு ஐரோப்பாவில் பரவிய சுதந்திரம் தொடர்பான அரசியல் கருத்தியல் லிபரல் வாதம் என அறியப்படுகின்றது.
- ⊕ அரசின் தோற்றம் பற்றிய லிபரல்வாதக் கருத்து பெரும்பாலும் சமுக படி முறை வளர்ச்சிக் கோட்பாட்டினை ஒத்ததாகும். அதன்படி அரசு செயற்கையாக தோற்றுவிக்கப்பட்டதோ அல்லது நிச்சயமான காரணிகளின் அடிப்படையில் தோன்றியதோ அல்ல அது சமுக படிமுறை வளர்ச்சியின் விளைவாக தோன்றியதாகும். இதன் படி சிதறிக் கிடந்த மனிதன் சில சமுகப்பண்புகளால் ஒரு பொது இடத்தில் நிலையாக குடிகொண்டு சமுகமாக ஒழுங்கமைந்தமையே அரசின் தோற்றத்தின் ஆரம்ப படியாகும்.
- ⊕ இரத்த உறவின் அடிப்டையில் தாய் தந்தை பிள்ளைகள் ஆகியோரைக் கொண்ட ஆரம்ப சமுக அலகான குடும்பம் தோன்றியது. குடும்பம் பரவலடைந்து பல குடும்பங்கள் உருவாகியதுடன் அக் குடும்பங்கள் ஒன்றிணைந்து குல மரபுகள் தோன்றின. பின்பு சமுதாயம் தோன்றியது. சமுதாயம் உருவாகிய போது இடம் பெற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ப்பட்ட ஏற்பாடுகளே அரசு தோன்ற காரணமாக அமைந்தது.
- ⊕ 17ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் ஆங்கிலேய தத்தவவியலாளரான ஜோன் லொக் தனியாள் சுதந்திரம் மற்றும் சொத்து தொடர்பாக குறிப்பிட்ட கருத்துக்களே லிபரல்வாத அபிவிருத்தி மற்றும் வலுவூட்டலுக்கும் பாரியளவில் தாக்கம்செலுத்தியது.
- ⊕ 18ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் தோற்றம் பெற்ற கைத்தொழில் முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு தலையிட வேண்டியதில்லை என்னும் புராதான பொருளியலாளர்களான அடம் ஸ்மித், டேவிட் ரிகாடோ ஆகிய இருவராலும் முன்வைக்கப்பட்டது.
- ⊕ இந்த பின்புலத்தில் அரசு பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற கருத்தியலை அடிப்படையாக கொண்டு அரசு தலையிடாவாதம் என்ற எண்ணக்கருவொன்று தோற்றம் பெற்றது. இது தாராண்மைவாத்தின் பழைமையான பிரிவாகும். ஆகவே மேற்கு

MS. IJAS AHAMED

ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட கைத்தொழில் முதலாளித்துவ பொருளாதார முறைமையின் அரசியல் வெளிப்பாடே தாராளவாதமாகும்.

இவ்வாறு பரவலடைந்த லிபரல்வாதம் மூன்று வகைகளில் இனங்கண்டு கொள்ள முடியும்.

- ❖ புராதான லிபரல்வாதம் - தலையிடா அரசு எண்ணக்கரு
- ❖ நவீன லிபரல்வாதம் - நலன்புரி அரசு எண்ணக்கரு
- ❖ நவ லிபரல்வாதம் - குறைந்த பட்ச எண்ணக்கரு

புராதான லிபரல்வாதம் (classical liberalism)

18ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பரவிய ஆரம்ப கால லிபரல்வாத கருத்தே புராதான லிபரல்வாதமாகும். இது எவ்வகையிலும் பொருளாதாரத்தில் அரசு தலையிடக்கூடாது என்றும் அரசு அமைதியான சூழலை உருவாக்குவதும் பக்சார்பற்ற வகையில் நீதியை நிலைநாட்டி நபர்களின் செயற்பாடுகளுக்கு மிகவும் குறைவான மட்டத்தில் தலையிடுதல் என்பதில் கரிசனை கொண்டது. இதன்படி குறைவாக நிர்வகிக்கப்படும் அரசு சிறந்த அரசு என்பதே இதன் கருத்தாகும்.

நவீன லிபரல்வாதம் (modern liberalism)

புராதான லிபரல் வாதத்தினால் கிடைத்த பொருளாதார சுதந்திரத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் இலாபத்தினை உச்சப்படுத்துவதற்காக தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்கான திறந்த வாய்ப்பு முதலாளித்துவ வகுப்பிற்கு கிடைத்ததது. இதனால் ஏற்படும் சமுக சமத்துவமின்மை பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் முகம் கொடுக்கும் வறுமை, தொழிலின்மை, மந்த போசனை, நோய்கள், அறிவற்ற நிலை போன்ற சமுக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேட வேண்டி ஏற்பட்டது. இதற்காக சட்டம் ஒழுங்கினைப் பேணி அரசு செய்யும் பொலிஸ் பணிகளுக்கு மேலதிகமாக சமுக நலன்புரிகளிலும் தலையிட வேண்டும். என்பதில் கவனம் செலுத்தபட்டது. இவ்வாறு சமூகத்தின் பொது நலனுக்காக அரசு தலையிட வேண்டும் என்பதை கோட்பாட்டுரீதியாக முன்வைத்தவர்கள் TH கிறீன் மற்றும் ஹொப்ஸ் ஹவுஸ் பிரபு போன்றோர் முக்கியமானவர்கள். இதன்படி அரச நலன்புரி எண்ணக்கரு ஆழ வேரூன்றியது.

நவ லிபரல்வாதம் (Neo liberalism)

சந்தை பொருளாதார முறைமையின் பிரவேசத்துடன் அரச நலன்புரிவாதம் பின்னிலையடைந்து முகாமைத்தவ அரச எண்ணக் கரு பரவலடைந்தது. இவ்வாறு ஆரம்பமாகும் நவதாராண்மைவாத எண்ணக்கருவினால் மீண்டும் ஒரு முறை அரசின் பணிகளைக் கட்டுப்படுத்தல் அல்லது குறைத்தலை கண்டு கொள்ள முடியும். எனினும் அது தலையிடா அரசைப் போல அரச பொருளாதார சமுக செயற்பாடுகளில் இருந்து விலகியிருத்தல் அல்லது தலையிடாதிருத்தலை குறைந்த பட்ச அரசியல் காண முடியாதுள்ளதோடு குறைந்த பட்ச அரச பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டைச் செலுத்தும். அதாவது சமுக அரசியல் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக அரசு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தலையிட வேண்டும் என்கின்றது. இதன்படி அரசு தலையிடாதவாதம் மற்றும் அரச நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையாக குறைந்த பட்ச அரசை அடையாளப்படுத்தலாம்.

பெண்ணியல்வாதம்

- ⊕ அரசு தொடர்பிலான பெண்ணியல்வாதக் கோட்பாடொன்று கிடையாது. எனினும் பால்நிலையை அடிப்படையாக கொண்டதோர் கோட்பாடாக இதனை அறியலாம். பெண்களின் சமூக நிலையை உயரத்துவதை நோக்கமாக கொண்ட கோட்பாடாகவும் கருத்தியலாகவும் அமையப் பெற்றது.
- ⊕ அரசியல் பொருளாதார சமுகரீதியாக ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரித்துக்களை பெண்களுக்கும் வழங்கவேண்டும் என்று வாதிடுவதே பெண்ணியல்வாதமாகும். இதற்கு பல அறிஞர்களும் விளக்கம் கொடுத்துள்ளனர்.

MS. IJAS AHAMED

⊕ ஆண்களின் உலக தத்துவத்திற்கேற்ப கட்டியெழுப்ப பட்டுள்ள தோற்றப்பாடு உலககத்தில் பெண்கள் அர்த்தப்படுவதோடு இதில் அவளின் உடலே மையப்படுத்தப்பட்டுள்ளது. அவளின் பொருள், கட்டழகு ஒழுங்கமைக்கப்படுகின்றது. அவளின் வாழ்க்கை விபரிக்கப்படுகின்றது. பெண்களின் வாழ்க்கையின் உள்ளடக்கம் தயாரிக்கப்படுகின்றது. அந்தந்த பால்நிலைக்கேற்ப குறித்த கடமைப் பொறுப்புக்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன.

சகல தளங்களிலும் ஆணுக்குள்ள அனைத்து உரிமைகளையும் பெண்களுக்கு தேவை என்பதை வலியுறுத்துவது பெண்ணிலைவாதமாகும்

பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள்சார்பாக வாதாடுவதே பெண்ணியல் வாதமாகும் "ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி"

⊕ பெண்ணியல்வாதத்தின் பல்வேறு கற்றல் துறைகள் உள்ளன. லிபரல்வாத, மார்க்ஸ்வாத மற்றும் தீவிரவாதம் என்பன பிரதானமானவை.

⊕ பெண்ணியல்வாதிகள் அரசு தொடர்பில் குறிப்பிடும் கருத்தாவது அரசு என்பது ஆண்களை மையப்படுத்தி உருவாக்கப்படும் உலகத்தை முன்னோக்கி கொண்டு செல்லும் ஆண்களின் கருவியாகும். அரசு தொடர்பான பெண்ணியல்வாதத்திற்கான கோட்பாடொன்று காணப்படாமையாலேயே லிபரல்வாதம் மற்றும் மார்க்ஸ்வாத கருத்துக்களிடையே இது சுழல்கிறது.

⊕ லிபரல் பெண்ணியல்வாதிகள் பெண்களின் விடுதலைக்காக அரசின் தலையீட்டினை ஏற்கின்றனர். மார்க்ஸ் வாத பெண்ணியல்வாதிகள் முதலாளித்துவ அரசை எதிர்க்க வேண்டும் என்கின்றனர். இவர்கள் பெண்களுக்கு நீதியினை பெற்றுக் கொடுக்கும் முறையொன்றை உருவாக்க வேண்டும் என கோருகின்றனர்.

⊕ இறுதியாக பெண்ணியல்வாதிகள் நிச்சயமாக ஆண் மைய கருவியாக உள்ள அரசு பெண்கள் மீது ஆண்கள் உலகத்தை திணிக்கும் கருவியாக செயற்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

MS. IJAS AHAMED